தனியாள் / நிறுவனத்தின் பெயர்	முறி பற்றிய விபரம்	கருத்திட்டம்	உப கருத்திட்டம்	செலவு விடயக் குறியீடு	நிதியிடல் குறியீடு	நி.ஒ. 94(2) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக எடுக்கக்கூடிய அதிகபட்ச கடப்பாடுகளின் எல்லை (ரூபா)	நி.ஒ. 94(3) இற்கு அமைவாக மொத்தச் செலவின மதிப்பீடு (ரூபா)	கடப்பாடு மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி (ரூபா)
1. அமைச்சு / அரசாங்கத் திணைக்களம்								
மொத்தம்	இல்லை							இல்லை
2. அரசாங்கக் கூட்டுத்தாபனம் / நியதிச் சட்டமுறைச் சபைகள்								
பலநோக்கு கூட்டுறவு சங்கம், யாழ்ப்பாணம்	எரிபொருள்	1	0	1202	11			75,600.00
ஸ்ரீலங்கா ரெலிகொம் பிஎல்சி, யாழ்ப்பாணம்	தொலைபேசி கட்டணம் செலுத்துதல்	1	0	1402	11			32,507.91
இலங்கை மின்சார சபை யாழ்ப்பாணம்	மின்சார கட்டணம் செலுத்துதல்	1	0	1403	11			55,798.02
பலநோக்கு கூட்டுறவு சங்கம், நெல்லியடி	எரிபொருள்	2	0	1202	11			10,500.00
பலநோக்கு கூட்டுறவு சங்கம், கரவெட்டி	எரிபொருள்	2	0	1202	11			1,748.05
பலநோக்கு கூட்டுறவு சங்கம், நல்லூர்	எரிபொருள்	2	0	1202	11			12,362.72
மொத்தம்								188,516.70
3. ஏனையவை (தனியார்த் துறை)								
ஊழியர்கள்	மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள்	1	0	1002	11			67,091.29

30

ஊழியர்கள்	பிரையாணச் செலவினம்	1	0	1101	11			85,223.00
ரி.சி.ரி மல்ரி ரேட் சென்ரர்	எழுதுகருவி கொள்வனவு	1	0	1201	11			1,950.00
க.திருக்குமார்	போக்குவரத்துப்பட்டி நிலுவைக் கொடுப்பனவுகள்	1	0	1401	11			368,333.33
கோல்டன் ஈகில் கே.ரி பிறைவேட் லிமற்ரட்	துப்பரவு சேவைக் கட்டணம்	1	0	1409	11			254,194.78
மேகன்ரைல் செக்கியுரிட்டி சேவிஸ் பிறைவேட் லிமற்ரட்	பாதுகாப்பு சேவைக கட்டணம்	1	0	1409	11			60,726.82
ஊழியர்கள்	மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள்	2	0	1002	11			154,995.34
ர.திருக்குமரன்	பிரையாணச் செலவினம்	2	0	1101	11			960.00
கூல் கிங்டம் என்ஜினியர்ஸ்	ஏ/சி பழுது	2	0	1302	11			100,050.00
ஜெப்னா ஓட்டோ மொபைல் பிறைவேட் லிமிற்ரட்	வாகன பாகம் மாற்றுதல்	2	0	1301	11			5,860.00
கே.சேந்தன்	நெடுஞ்சாலைக கட்டணம்	2	0	1301	11			450.00
எச்.எ. மல்ரி ஸ்பொட்	புகைப்பட நகல் சேவைக் கட்டணம்	2	0	1302	11			34,783.47
எ.ஐ.ரி சொலுசன்	யுபிஎஸ் பேட்டரி கொள்வனவு	2	0	1302	11			16,450.00
நலன்புரிச் சங்கம்,பிரதேச செயலகம், நல்லூர்	தண்ணீர் பிட்டர் கொள்வனவு	2	0	1302	11			18,000.00
கோல்டன் ஈகில் கே.ரி பிறைவேட் லிமிற்ரட்	பாதுகாப்பு சேவைக கட்டணம்	2	1	1409	11			11,040.30
மொத்தம்								1,180,108.33
முழு மொத்தம்								1,368,625.03

என். எஸ். ஆர் சிவரூபன்
பிரதம கணக்காளர்,
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலருக்காக
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

பிரதான நிதி உத்தியோகத்தரின் / பிரதான கணக்காளர்
பணிப்பாளர்(நிதி) / ஆணையாளர்(நிதி)

திகதி : 17.02.2023

பின்னிணைப்பு - (vii)

காணாமல்போன வவுச்சர் பற்றிய கூற்று

அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

செலவினத் தலைப்பு இல: 264

நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கமும் பெயரும் :


திகதி	வவுச்சர் இலக்கம்	பெறுபவரின் பெயர்	கொடுப்பனவின் தன்மை	தொகை (ரூபா)
		இல்லை		

* அறிக்கையிடும் நிறுவனங்களில் இந்த அறிக்கைகள் தொடர்பான தகவல்கள் இல்லை என்றால் இல்லை என அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

என். எஸ். ஆர் சிவரூபன்
பிரதம கணக்காளர்,
அரசாங்க அதிபர் / மாவட்டச் செயலருக்காக
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

பிரதான நிதி உத்தியோகத்தர் / பிரதான கணக்காளர் /
பணிப்பாளர்(நிதி) / ஆணையாளர்(நிதி)

திகதி : 17.02.2023



பின்னிணைப்பு - (viii)

2015/10/23 ஆம் திகதி வெளியிடப்பட்ட திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கை இலக்கம் 2015/03 இல் (1) ஆவது பந்தியின் அறிவுரைகளுக்கு இணங்க ஆரம்பிக்கப்பட்ட புதிய வங்கிக் கணக்குகள் பற்றிய

2022.12.31ஆம் திகதிக்குரிய நிலைமை பற்றிய அறிக்கை

செலவினத் தலைப்பு இல: 264
அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

தொடர் இல.	வங்கியின் பெயர்	கணக்கு இலக்கம்	2022.12.31 ஆம் திகதியன்று வங்கிக் கூற்றின் பிரகாரம் மீதி	2022.12.31 ஆம் திகதியன்று காசேட்டின் பிரகாரம் மீதி	2022.12.31ஆம் திகதிக்கு வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத மொத்தக் காசோலைகள் (6 மாதங்களுக்கு மேலாக இருப்பின்)	இறுதியாக வங்கி சரிசெய்தல் தயாரிக்கப்பட்டுள்ள மாதம்
1	இலங்கை வங்கி, தபரபேன்	7041928	69,064,216.22	-	-	டிசம்பர் - 2022
2	இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்	7041946	18,047,188.42	-	-	டிசம்பர் - 2022
3	இலங்கை வங்கி, வேலனை	7041929	5,243,608.57	-	-	டிசம்பர் - 2022
4	இலங்கை வங்கி, வேலனை	7041940	5,726,290.62	-	-	டிசம்பர் - 2022
5	இலங்கை வங்கி, ஊர்காவற்றுறை	7041930	3,085,996.06	-	-	டிசம்பர் - 2022
6	இலங்கை வங்கி, காரைநகர்	7041933	2,309,199.83	-	-	டிசம்பர் - 2022
7	இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்	7041943	17,900,626.74	-	-	டிசம்பர் - 2022
8	மக்கள் வங்கி, பல்கலைக்கழகக் கிளை	162-1-001-2-9026849	7,924,875.51	-	-	டிசம்பர் - 2022
9	மக்கள் வங்கி, சங்கானை	108-1-001-2-9026843	25,853,518.05	-	-	டிசம்பர் - 2022
10	மக்கள் வங்கி, சங்கானை	108-1-001-7-9026831	4,657,253.83	-	-	டிசம்பர் - 2022
11	மக்கள் வங்கி, கண்ணாகம்	109-1-001-0-9026834	5,360,687.16	-	-	டிசம்பர் - 2022
12	மக்கள் வங்கி, கண்ணாகம்	109-1-001-4-9026846	15,605,003.31	-	-	டிசம்பர் - 2022
13	மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதிக் கிளை	030-1-001-1-9026840	7,439,501.35	-	-	டிசம்பர் - 2022
14	இலங்கை வங்கி, சாவகச்சேரி	7041931	33,275,292.10	-	-	டிசம்பர் - 2022
15	இலங்கை வங்கி, நெல்லியடி	7041937	4,960,941.80	-	-	டிசம்பர் - 2022
16	இலங்கை வங்கி, பருத்தித்துறை	7041934	9,233,814.42	-	-	டிசம்பர் - 2022
17	இலங்கை வங்கி, பருத்தித்துறை	7041935	4,205,758.99	-	-	டிசம்பர் - 2022

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

எஸ். எஸ். ஆர். சிவரூபன்
பிரதம கணக்காளர்,
ஆளணி / மாவட்டச் செயலகத்துக்காக
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

பிரதான நிதி உத்தியோகத்தர் / பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி) / ஆணையாளர்(நிதி)
திகதி : 14.02.2023

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	2021	2022		
		உண்மை	மதிப்பீடு	மீளாய்வுசெய்யப்பட்டது	உண்மை
10.03.07.02	பதிவாளர் நாயகத் திணைக்களப் பதிவுக்கட்டணம்	28,235,030.00	-	-	41,014,637.19
10.03.07.03	தனியார் மரப் போக்குவரத்து	383,690.80	-	-	329,869.56
10.03.07.04	மோட்டார் வாகன விற்பனை வரி	18,933.00	-	-	-
10.03.07.05	பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தொடர்பான அனுமதிப் பத்திரக்கட்டணம்	290.00	-	-	13,110.00
10.03.07.99	பிற வருமானங்கள்	546,949.00	800,000.00	500,000.00	572,879.00
20.02.01.01	அரசாங்கக் கட்டடங்கள் மீதானவாடகை	280,437.50	230,000.00	700,000.00	838,662.50
20.02.01.99	அரசாங்க சொத்துக்களில் இருந்து கிடைக்கும் வருமானங்கள் வாடகை- ஏனைய வாடகை	18,000.00	-	36,000.00	51,000.00

20.02.02.99	பிற வருமானங்கள்	9,787,685.10	9,500,000.00	9,500,000.00	9,051,293.28
20.03.02.03	கடவுச்சீட்டு கட்டணம்	4,352,000.00	-	-	7,202,650.00
20.03.02.13	பரீட்சைக் கட்டணம்	169,450.00	-	-	73,800.00
20.03.02.14	மோட்டார் வாகனகட்டணம்	67,892,365.00	-	-	97,664,180.00
20.03.02.99	பிற சில்லறைப் பொருட்கள்	35,234.50	120,000.00	120,000.00	67,119.11
20.03.99.00	பிற பெறுவனவுகள்	19,687,155.83	8,000,000.00	8,000,000.00	9,311,184.99
20.04.01.00	மத்திய அரசாங்கம்	65,812,783.22	-	-	77,780,930.79
20.06.02.01	மூலதன சொத்துக்களின் விற்பனை-வாகனங்கள்	5,564,955.00	-	1,000,000.00	118,000.00
20.06.02.02	மூலதனச் சொத்துக்களின் விற்பனை	843,940.00	500,000.00	807,707.00	807,707.00
மொத்தம்		**203,628,898.95**	**19,150,000.00**	**20,663,707.00**	**244,897,023.42**

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ஏடு - 2

2022 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமான செலவினத்தின் கருக்கம்

செலவின தலைப்பு இல : 264
அமைச்சின் / திணைக்களத்தின் / மாவட்டச் செயலகத்தின் பெயர் : மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

ரூபா

வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்ட இல.	செலவினத் தலைப்பு	வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாடு (1)	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (2)	நி.மு 66/69 மாற்றங்கள் (3)	மொத்தத் தேறிய ஒதுக்கீடு (4)=(1)+(2)+(3)	மொத்தச் செலவினம் (5)	தேறிய பெறுபேறு மீதி / மேற்றல் (6)=(4)-(5)
நிகழ்ச்சித் திட்டம் (1)	(1) மீண்டுவரும்	1,239,000,000	-	-	1,239,000,000	1,238,360,715	639,285
	(2) மூலதனம்	322,000,000	-	-	322,000,000	321,607,732	392,268
	உப மொத்தம்	**1,561,000,000**	-	-	**1,561,000,000**	**1,559,968,447**	**1,031,553**
நிகழ்ச்சித் திட்டம் (2)	(1) மீண்டுவரும்						
	(2) மூலதனம்						
	உப மொத்தம்						
	முழு மொத்தம்	**1,561,000,000**	-	-	**1,561,000,000**	**1,559,968,447**	**1,031,553**

எஸ்.எஸ்.ஸ்ரீ சிவஞானம்
பிரதம கணக்காளர்,
ஆளுகை அதிபர் / மாவட்டச் செயலகத்தை
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

பிரதான நிதி உத்தியோகத்தர் / பிரதான கணக்கீட்டாளர்
பணிப்பாளர் (நிதி) / துணைவாளர் (நிதி)
திகதி : 17.02.2023

3.7 நி.பி. குறிப்பு 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் திணைக்களங்களின் முகவராக மாவட்டச் செயலகத்தின் செலவினத்திற்கான ஒதுக்கீடு

அமைச்சு / திணைக்களம்	மீண்டுவரும் செலவினம்		மூலதனச் செலவினம்		மொத்தச் செலவினம்	
	ஒதுக்கீடு	செலவு	ஒதுக்கீடு	செலவு	ஒதுக்கீடு	செலவு
புத்தசாசனம், மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு	393,450.00	393,450.00	535,200.00	535,200.00	928,650.00	928,650.00
நிதி, பொருளாதாரம் மற்றும் தேசிய கொள்கை	8,344,064.00	8,333,447.00	-	-	8,344,064.00	8,333,447.00
பாதுகாப்பு அமைச்சு	22,452,160.30	22,430,130.14	11,462,065.68	11,426,184.48	33,914,225.98	33,856,314.62
நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு	7,753,390.00	7,735,390.00	2,959,070.00	2,959,070.00	10,712,460.00	10,694,460.00
சுகாதார அமைச்சு	6,993,077.95	6,718,226.67	746,216.10	631,094.79	7,739,294.05	7,349,321.46
வியாபாரம் மற்றும் வர்த்தக அமைச்சு	-	-	997,468.60	997,468.60	997,468.60	997,468.60
விவசாய அமைச்சு	161,006,537.55	47,344,389.63	4,024,955.06	4,024,851.06	165,031,492.61	51,369,240.69
காணி அமைச்சு	15,453,937.23	15,308,915.29	40,450,030.81	40,450,030.81	55,903,968.04	55,758,946.10
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு	1,175,881.60	1,158,188.14	492,132,186.21	492,132,144.12	493,308,067.81	493,290,332.26
கல்வி அமைச்சு	1,806,896.66	1,790,801.99	2,281,989.82	2,281,989.82	4,088,886.48	4,072,791.81
உள்நாட்டலுவல்கள் அமைச்சு	665,494,048.92	665,034,760.08	459,000.00	425,484.00	665,953,048.92	665,460,244.08
கைத்தொழில் அமைச்சு	-	-	7,773,031.22	7,773,031.22	7,773,031.22	7,773,031.22
மீன்பிடி அமைச்சு	-	-	19,668,221.04	19,668,221.04	19,668,221.04	19,668,221.04
சுற்றாடல் அமைச்சு	10,192,315.16	10,054,615.16	1,530,000.00	1,529,258.00	11,722,315.16	11,583,873.16
பெண்கள் சிறுவர்கள் விவகார அமைச்சு	964,483,656.69	962,681,602.64	164,486,053.28	154,450,983.68	1,128,969,709.97	1,117,132,586.32
தொழில் நுட்ப அமைச்சு	-	-	727,543.95	682,685.53	727,543.95	682,685.53
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு	5,000,000.00	2,456,252.87	-	-	5,000,000.00	2,456,252.87
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு	1,228,792.00	1,217,232.00	-	-	1,228,792.00	1,217,232.00
வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு	2,049,654.72	1,952,064.62	135,495.00	135,495.00	2,185,149.72	2,087,559.62

விளையாட்டுத் துறை அமைச்சு	1,244,427.50	1,209,787.95	6,383,139.94	6,382,779.94	7,627,567.44	7,592,567.89
பௌத்த விவகார திணைக்களம்	35,750.00	30,250.00	-	-	35,750.00	30,250.00
முஸ்லீம் சமய கலாசார திணைக்களம்	22,493.50	22,433.50	66,778.73	66,778.73	89,272.23	89,212.23
கிறீஸ்தவ விவகார திணைக்களம்	3,277,500.00	3,277,219.00	-	-	3,277,500.00	3,277,219.00
கலாசார அலுவல்கள் திணைக்களம்	3,591,484.75	3,583,034.72	7,000.00	7,000.00	3,598,484.75	3,590,034.72
அரசாங்க தகவல் திணைக்களம்	187,280.67	183,235.35	686,691.05	686,691.05	873,971.72	869,926.40
சமூக சேவைத் திணைக்களம்	14,588,516.77	14,509,892.87	102,104.50	101,907.50	14,690,621.27	14,611,800.37
சிறுவர் பராமரிப்புத் திணைக்களம்	475,086.00	408,789.78	919,350.00	919,350.00	1,394,436.00	1,328,139.78
விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்	489,824.00	489,618.00	-	-	489,824.00	489,618.00
சித்த ஆயுர்வேத திணைக்களம்	386,500.00	386,500.00	-	-	386,500.00	386,500.00
ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம்	19,123,228.59	19,079,573.59	-	-	19,123,228.59	19,079,573.59
தேசிய திட்டமிடல் திணைக்களம்	-	-	158,500.00	158,500.00	158,500.00	158,500.00
இலங்கை சுங்கம்	-	-	487,955.46	479,255.46	487,955.46	479,255.46
புள்ளி விபரவியல் திணைக்களம்	1,033,884.11	1,033,515.11	-	-	1,033,884.11	1,033,515.11
ஓய்வூதிய திணைக்களம்	4,548,186.62	4,462,886.48	-	-	4,548,186.62	4,462,886.48
பதிவாளர் நாயகம் திணைக்களம்	-	-	332,000.00	332,000.00	332,000.00	332,000.00
மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்	1,239,000,000.00	1,234,353,800.11	322,000,000.00	321,607,732.12	1,561,000,000.00	1,555,961,532.23
காணி ஆணையாளர் திணைக்களம்	2,874,980.00	2,874,958.67	-	-	2,874,980.00	2,874,958.67
மீன்பிடி மற்றும் நீரியல் வள திணைக்களம்	-	-	159,000.00	159,000.00	159,000.00	159,000.00
கடலோர பாதுகாப்பு மற்றும் வள முகாமைத்துவ திணைக்களம்	30,000.00	30,000.00	45,000.00	45,000.00	75,000.00	75,000.00
உணவு ஆணையாளர் திணைக்களம்	-	-	7,000,000.00	7,000,000.00	7,000,000.00	7,000,000.00
மோட்டார் போக்குவரத்து திணைக்களம்	5,689,575.36	5,468,807.96	650,000.00	650,000.00	6,339,575.36	6,118,807.96
சமுதாயம் சார் சீரமைப்பு திணைக்களம்	22,500.00	22,500.00	-	-	22,500.00	22,500.00

காணி பயன்பாட்டுக் கொள்கைகள் திணைக்களம்	497,302.78	487,160.78	981,440.00	913,813.20	1,478,742.78	1,400,973.98
மனிதவள மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களம்	1,161,356.84	1,089,000.04	244,568.73	244,568.73	1,405,925.57	1,333,568.77
பலநோக்கு அபிவிருத்தி விசேட படை திணைக்களம்	42,475,322.53	41,934,972.04	-	-	42,475,322.53	41,934,972.04
நுண்ணியல் தொழில்நுட்ப மற்றும் முயற்சிகள் அபிவிருத்தி திணைக்களம்	3,415,447.66	3,415,447.66	-	-	3,415,447.66	3,415,447.66
மொத்தம்	**3,217,998,510.46**	**3,092,962,849.84**	**1,090,592,055.18**	**1,079,857,568.88**	**4,308,590,565.64**	**4,172,820,418.72**

3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை

ஆதன குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2022 திகதிய சுற்றாய்வுச்சபை அறிக்கையின் படி மீதி	31.12.2022 திகதிய நிதி நிலைமை அறிக்கையின் படி மீதி
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	1,390,239,499.54	1,390,239,499.54
9152	இயந்திரம் மற்றும் உபகரணம்	631,086,530.02	631,086,530.02
9153	காணி	438,660,000.00	438,660,000.00
9160	நடைபெறும் பணிகள்	0.00	0.00

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

எனது இல. My No. NPCG/JF/A/DSJ/02/22 உமது இல. Your No.

திகதி Date 15 மே 2023

மாவட்டச் செயலாளர்,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்க இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட கீழே காட்டப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

பந்திக்கான தொடர்பு	கணக்காய்வு அவதானிப்பு	பரிந்துரை
1.6.1 (ஒ)	காரைநகர் பிரதேச செயலகத்தின் காணி தனியாருக்குச் சொந்தமானதாக இருந்த போதிலும் அதன் பெறுமதி ரூபா 2 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்களில் காட்டப்பட்டுள்ளதுடன் இக்காணியில் அலுவலக கட்டடமானது ரூபா 58.14 மில்லியன் பெறுமதியில்	தனியார் காணியை அரசுடமையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

	நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் காணியின் உரிமைத்துவத்தினை பெற்றுக்கொள்வதற்கு 2022 ஏப்ரல் 30 வரை எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.	
1.6.1 (எ)	மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான ரூபா 2,600,000 பெறுமதியான WPGU 5610 இலக்க வாகனம் மீளாய்வாண்டு நிதிநிலைமைக்கூற்றில் நிதியல்லாச் சொத்தாக காண்பிக்கப்பட்டிருக்காமையால் சொத்தின் பெறுமதி ரூபா 2,600,000 ஆல் குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது.	குறித்த வாகனம் நிதிநிலைமைக்கூற்றில் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
3.3 (இ)	ரூபா 56,640,750 கிரயத்தில் 2019 இல் பூர்த்தி செய்யப்பட வேண்டிய பால் பாதுகாப்பு செயற்திட்டம் 2022 யூலை வரை பூர்த்திசெய்யப்படவில்லை. எனினும் மாவட்டச் செயலகம் ரூபா 4,822,238 தொகையான செயலாற்றல் பிணைமுறியை முலப்பிரதிகளைப் பெற்றுக்கொள்ளாமல் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதால் உடன்படிக்கையை மீறுவதற்கு எதிராக பிணைமுறியை வருமானமாக செலவு வைக்க முடியாதிருந்தது.	பிணைமுறியை பணமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

வருமானங்களின் பெறுவனவு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

மாவட்டச் செயலக சூரிய மின்கலத்தொகுதி பராமரிப்பு வேலைக்கென ரூபா 90,000 பொது வைப்புக்கணக்கில் காணப்பட்டிருந்தது உடன்படிக்கையின் பிரகாரம் அரச வருமானமாக மாற்றப்பட வேண்டிய ரூபா 48,000 வருமானமாக மாற்றப்படாது பொது வைப்புக்கணக்கில் காணப்படுகின்றது.

1.6.2 நிதி நிலமை தொடர்பான கூற்று

நிதியல்லாத சொத்துக்கள

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(அ) 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிநிலைமைக்கூற்றில் (ACA–P) காணப்பட்ட நிதி அல்லாச்சொத்துக்களின் மீதி ரூபா 1,589,235,246 ஆக காணப்பட்டபோதிலும் 2022 ஜனவரி 01 ஆந் திகதி திறைசேரியின் அச்சுப்பதிப்பின் (SA 82) சொத்துக்களின் பெறுமதி ரூபா 1,554,143,558 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 35,091,668 வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மாவட்டச் செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களுக்கு உரித்தான 46 எண்ணிக்கையான ரூபா 87,270,618 சொத்துக்கள் மீளாய்வாண்டு நிதிநிலைமைக்கூற்றில் நிதியல்லாச் சொத்தாக காண்பிக்கப்பட்டிருக்காமையால் சொத்தின் பெறுமதி ரூபா 87,270,618 ஆல் குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(இ) மாவட்டச் செயலகம் மற்றும் யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு உரித்தான 35 எண்ணிக்கையான நிலையான சொத்துக்கள் பெறுமதி மதிப்பிடப்பட்டு மீளாய்வாண்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படாமையினால் மீளாய்வாண்டின் நிதிநிலைமைக்கூற்றில் (ACA–P) வெளிப்படுத்தப்பட்ட நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி குறைத்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் நிதிசெயலாற்றுகைக்கூற்றில் (ACA–F) மூலதனச் சொத்துக்களின் கொள்வனவாக ரூபா 11,991,950 காண்பிக்கப்பட்டிருந்தபோதிலும் திறைசேரியின் அச்சுப்பதிப்பின் SA82 இல் ரூபா 90,206,314 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையினால் ரூபா 78,214,364 வேறுபாடு காணப்பட்டது.

(உ) 2022.12.31 இல் திறைசேரியின் அச்சுப்பதிப்பின் SA82 இல் நிதியல்லாச் சொத்துக்களின் அகற்றல் கூட்டுமொத்தம் ரூபா 398,085,601 ஆக காண்பிக்கப்பட்டிருந்தபோதிலும் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் New Cigas Assets List இல் கூட்டுமொத்தம் ரூபா 398,576,087 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 490,486 வேறுபாடு காணப்பட்டது.

(ஊ) மாவட்ட செயலக நிதி நிலைமைக்கூற்று (ACA–P) இல் நிதியல்லா சொத்துகளின் பெறுமதியினுள், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின், 04/2018 ஆம் இலக்க 2018.12.31 ஆந் திகதிய சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு மாறாக, 2016 தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிகளில் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்ட சொத்துகளின் பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 38,800,243 உள்ளடக்கப்பட்டுள்ளமையினால் மீளாய்வாண்டின் நிதிநிலைமைக்கூற்றில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 38,800,243 ஆல் அதிகரித்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(எ) 2022 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடு காணப்படாதபோதிலும் 2022 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கான செலவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 855,841 தொகை 2022.12.31 ஆந் திகதிய பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளில் உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளின் பெறுமதி அதிகரித்து வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களினால் பின்வரும் சில பதிவேடுகள் உரிய பிரமாணங்களின் படி பேணப்பட்டிராததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளது வரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டிருந்தது. விபரம் வருமாறு.

இல	பதிவேடுகளின் வகை	உரிய பிரமாணங்கள்	அவதானிப்புக்கள்
1)	பொறுப்புகள் தொடர்பான பதிவேடு	நிதிப்பிரமாணம் 214	மீளாய்வாண்டில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.
2)	மின் பொருத்துக்களின் பொருள் இருப்பு பதிவேடு	நிதிப்பிரமாணம் 454(2)	கடந்த 09 ஆண்டுகளுக்கு மேலாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.
3)	நிலையான சொத்துப்பதிவேடு	நிதிப்பிரமாணம் 502(2)	நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.
4)	இருப்பு பதிவேடு	நிதிப்பிரமாணம் 751, 763	மீளாய்வாண்டில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

5)	உத்தியோகபூர்வ தொலைபேசிப்பதிவேடு	நிதிப்பிரமாணம் 845(1)	நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.
6)	பிணைகள் பதிவேடு	நிதிப்பிரமாணம் 891(1)	மீளாய்வாண்டில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.
7)	கேள்விகோரல் பதிவேடு	அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.2.1 ஆம் வழிகாட்டி	கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.
8)	பெறுகைகள் குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுக்களின் வருகைப்பதிவேடு	அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.11.2 ஆம் வழிகாட்டி	கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.
9)	விடுமுறை தினக் கொடுப்பனவு பதிவேடு	தாபன விதிக்கோவையின் அத்தியாயம் viii, 10.2	பிரதேச செயலகங்களில் விடுமுறைதினக் கொடுப்பனவு பதிவேடு மீளாய்வாண்டில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.
10)	விடுமுறைப்பதிவேடு	தாபன விதிக்கோவையின் xii, 1.7	பிரதேச செயலகங்களில் விடுமுறை பதிவேடு மீளாய்வாண்டில் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

2 நிதி மீளாய்வு

2.1 செலவின முகாமைத்துவம்

(அ) மீண்டெழும் செலவினங்களின் 08 செலவு விடயங்களில் 9 சதவீதம் தொடக்கம் 54 சதவீதம் என்ற வீச்சிலான சேமிப்புக்கள் கூட்டுமொத்தம் ரூபா 2,019,895 மூல ஒதுக்கீட்டிலிருந்து வேறு செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) 08 செலவின விடயங்களுக்கு மூல ஒதுக்கீட்டின் 6 சதவீதம் தொடக்கம் 50 சதவீதம் என்ற வீச்சிலான கூட்டுமொத்தம் ரூபா 13,349,895 வேறு செலவின விடயங்களிலிருந்து மூல ஒதுக்கீட்டிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(இ) மீண்டெழும் செலவினங்களின் மூல ஒதுக்கீடுகளின் 05 செலவின விடயங்களில் 9 சதவீதம் தொடக்கம் 47 சதவீதம் என்ற வீச்சிலான கூட்டுமொத்தம் ரூபா 4,963,050 வகைமாற்றம் செய்யப்பட்டமைக்கான திருப்திகரமான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2 மிகை செலவினம்

மாவட்டச் செயலகம் மற்றும் 02 பிரதேச செயலகங்களில் 02 எண்ணிக்கையான உத்தியோகத்தர்களுக்கு சம்பளக்கொடுப்பனவு கூட்டுமொத்தம் ரூபா 90,908 மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

2.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாடுகளின் பயன்பாடு

2.3.1 பொறுப்புக்கள் கடப்பாடுகளுக்கு உட்படல்

ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களின் 03 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் மூலதனச் செலவினத்தில் 03 செலவினத் தலைப்புக்களின் கீழ் கூட்டுமொத்தம் ரூபா 314,129,991 செயற்திட்ட வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் திறைசேரியிடமிருந்து மீளாய்வாண்டிற்கான கட்டுநிதி கிடைக்கப்பெறாமையால் அவற்றிற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாது பொறுப்பாக காட்டப்பட்டிருந்தது.

2.3.2 மீண்டுவரும் செலவினம்

05 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மீண்டெழும் செலவின விடயங்களின் கீழ் மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்தப்பட்டிருக்காமையால் அந் நிதியேற்பாட்டிலிருந்து 6 சதவீதம் முதல் 71 சதவீதம் வரையான வீச்சளவில் கூட்டுமொத்தம் ரூபா 116,350,048 சேமிக்கப்பட்டிருந்தது.

2.3.3 மூலதன செலவினம்

05 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மூலதன செலவின விடயங்களின் கீழ் மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் பயன்படுத்தப்பட்டிருக்காமையால் அந் நிதியேற்பாட்டிலிருந்து 6 சதவீதம் முதல் 15 சதவீதம் வரையான வீச்சளவில் கூட்டுமொத்தம் ரூபா 10,296,192 சேமிக்கப்பட்டிருந்தது.

2.3.4 அறவீடு செய்யப்படாத நிலுவைகள்

(அ) 06 பிரதேச செயலகங்களில் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் இலங்கையில் விதவைகள் மற்றும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு இயங்கும் பெண்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்காக வழங்கப்பட்ட வட்டியில்லாக்கடன் தொகையில் கூட்டுமொத்தம் ரூபா 337,200 கடன் 01 வருடம் தொடக்கம் 11 வருடங்களாக நாளதுவரை வரை அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 02 பிரதேச செயலகங்களில் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் இலங்கையில் விதவைகள் மற்றும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு இயங்கும் பெண்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்காக வழங்கப்பட்ட வட்டியுடனான கடன் தொகையில் கூட்டுமொத்தம் ரூபா 265,220 கடன் 02 வருடம் தொடக்கம் 12 வருடங்களாக 2022.12.31 வரை அறவீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 11 பிரதேச செயலகங்களில் சமுர்த்தி அலுவலத்தில் 2049 பயனாளிகளிடமிருந்து 01 தொடக்கம் 36 வரையான தவணைக்கட்டணங்கள் அறவிடப்படாது ரூபா 32,761,569 2022.12.31 இல் நிலுவையாக காணப்பட்டிருந்தன.

2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

இல	சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	பெறுமதி ரூபா	இணங்காமை
1)	இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு நிதி ஒழுங்கு விதிகள்		
	(i) இலக்கம் 115(4)(5)	421,109	மீளாய்வாண்டில் 04 பிரதேச செயலகங்களுக்கு நிதிப்பிரமாணத்திற்கு மாறாக கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தன.

(ii) இலக்கம் 392 (அ), (ஆ)	8,415,886	மாவட்டச் செயலகம் மற்றும் 07 பிரதேச செயலகங்களில் 55 எண்ணிக்கையான காசோலைகள் நிதிப்பிரமாணத்தில் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களுக்கு மாறாக பதில் காசோலைகள் வரையப்பட்டிருந்தன.
2) இலங்கை சனநாயக சோஷலிசக்குடியரசின் தாபன விதிக்கோவை		
(i) அத்தியாயம் xii பிரிவு 23.18		மாவடடச் செயகலம் மற்றும் 08 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் 21 உத்தியோகத்தர்கள் தீவிற்கு வெளியே கழிக்கின்ற லீவுகள் தொடர்பான அறிக்கை தினைக்களத் தலைவரினால் மாதாந்தம் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(ii) அத்தியாயம் xiv பந்தி 29.5.2		08 பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் 11 உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்காக 25 எண்ணிக்கையான கடமை புகையிரத ஆணைச்சீட்டுக்கள் வழங்கப்பட்டிருந்தன.

2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தினால் 2021 ஆம் ஆண்டில் ரூபா 195,000 செலவில் நடைமுறைப்படுத்தப்பட்ட "Detfull fledged Residential Economic 200000 Samurdhi Beneficiaries Empowerment Programme" செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்காதபோதிலும் வேலை பூர்த்தி செய்யப்பட்டதாக வேலை நிறைவேற்று அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையானது நிதிப்பிரமாணம் 137, 138, 139 மற்றும் 237அ (i) இற்கு மாறான விடயமாகும்.

2.6 முற்பணம் வழங்கலும் தீர்ப்பனவும்

அரச உத்தியோகத்தர் முற்பணக் கணக்குகள்

மாவட்டச் செயலகத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான அரச உத்தியோகத்தர் முற்பணக் கணக்கினைக்கூற்றின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக அறவீடுகள் நிலுவையாகவிருந்த பதவிவெறிதாக்கப்பட்ட, ஒய்வுபெற்ற மற்றும் இறந்த அலுவலர்களின் கூட்டுமொத்தம் ரூபா 721,227 தாபனவிதிக்கோவையின் அத்தியாயம் XXIV பிரிவு 4 இன் பிரகாரம் 03 மாதங்கள் தொடக்கம் 03 வருடங்கள் வரை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.7 வைப்புக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) மாவட்டச் செயலகத்தில் செலவின மீளளிப்பாக பெறப்பட்ட வைப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 20,458,645, 06 மாதங்கள் தொடக்கம் 04 வருடங்களாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காது வைப்புக் கணக்கில் பேணப்பட்டுவருகின்றன.

(ஆ) மாவட்டச் செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களில் பிடிபண வைப்புக்கள் மற்றும் மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகள் ஆகியவற்றின் கூட்டுமொத்தம் ரூபா 3,748,029, 02 வருடங்களிற்கு மேலாக நிதிப்பிரமாணம் 571 இற்கு அமைவாக நடவடிக்கைக எடுக்கப்பட்டிராது வைப்புக் கணக்கில் பேணப்பட்டுவருகின்றன.

3 செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

3.1.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

(அ) மாவட்டச் செயலகத்தினால் 2018 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கமைய தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார மத்திய நிலையத்திற்கு கட்டம் I இல் 2018 ஆம் ஆண்டில் ரூபா 124,963,479 மற்றும் கட்டம் II இல் 2020 ஆம் ஆண்டில் நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாட்டு விதை உற்பத்தி மற்றும் உயர் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சினால் ரூபா 71,075,767 கூட்டுமொத்தம் ரூபா 196,039,247 வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு 2021 ஆம் ஆண்டில் வேலைகள் முடிவுறுத்தப்பட்டிருந்தபோதிலும் குறித்த செயற்திட்டம் நாளதுவரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 பிரதேச செயலகங்களில் 2022 ஆம் ஆண்டு மூன்று மில்லியன் கிராமத்துடனான கலந்துரையாடல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கூட்டுமொத்தம் ரூபா 12,591,254 செலவில் நடைமுறைப்படுத்தப்பட்ட 11 எண்ணிக்கையான செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தபோதிலும் குறித்த செயற்திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட நலன் அடையப்பெற்றிருக்கவில்லை.

(இ) 06 பிரதேச செயலகத்தினால் 2021 ஆம் ஆண்டு சௌபாக்கிய உற்பத்தி கிராமம் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட கூட்டுமொத்தம் ரூபா 29,713,780, 09 எண்ணிக்கையான செயற்த்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டு ஒரு வருடம் கடந்த நிலையிலும் நாளதுவரை குறித்த செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படாது காணப்படுகின்றமையானது குறித்த செயற்திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட நலன் அடையப்பெற்றிருக்கவில்லை.

(ஈ) தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் 2022 ஆம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்குவதற்காக ரூபா 555,000 17 வகையான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டபோதிலும் பொருட்கள் நாளதுவரை உரிய பயனாளிகளுக்கு வழங்கப்படாது பிரதேச செயலகத்தில் காணப்பட்டிருந்தமை குறித்த செயற்திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட நலன் அடையப்பெற்றிருக்கவில்லை.

(உ) 08 பிரதேச செயலகங்களில் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் இலங்கையில் விதவைகள் மற்றும் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு இயங்கும் பெண்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்காக வழங்கப்பட்ட வட்டி, வட்டியில்லாமல் வழங்கப்பட்ட கடன்தொகையில் கூட்டுமொத்தம் ரூபா 1,134,171 கடன் 02 வருடம் தொடக்கம் 09 வருடங்கள் வரை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாது வங்கியில் வைப்பாக காணப்படுகின்றமை குறித்த செயற்திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட நலன் அடையப்பெற்றிருக்கவில்லை.

(ஊ) மாவட்டச் செயலகத்தினால் 2021 ஆம் ஆண்டின் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்து ஆலயங்களின் தகவல்களை திரட்டுவதற்காக நிதியுதவியாக ரூபா 300,000 பெறப்பட்டிருந்தபோதிலும் குறித்த நோக்கத்திற்கு குறித்த பணம் பயன்படுத்தப்படாது பொது வைப்புக்கணக்கில் காணப்படுகின்றமை குறித்த செயற்திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட நலன் அடையப்பெற்றிருக்கவில்லை.

(எ) மாவட்டச் செயலகத்தினால் 2022 ஆம் ஆண்டின் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்து சமய அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி நெறிக்காக நிதியுதவியாக ரூபா 300,000 பெறப்பட்டிருந்தபோதிலும் குறித்த நோக்கத்திற்கு குறித்த பணம் பயன்படுத்தப்படாது பொது வைப்புக்கணக்கில் காணப்படுகின்றமை குறித்த செயற்திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட நலன் அடையப்பெற்றிருக்கவில்லை.

(ஏ) தீவகம் வடக்கு பிரதேச செயலகத்தினால் 2022 ஆம் ஆணடு மூன்று வழி மின்னிணைப்புக்காக கூட்டுமொத்தம் ரூபா 1,218,820 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தபோதிலும் தொழில்நுட்ப உத்தியோகத்தரால் வேலை நிறைவேற்று அறிக்கை (Work completion report) வழங்கப்பட்டிருக்காமை குறித்த செலவினத்தை சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

3.1.2 செயற்திட்டத்தை பூர்த்திசெய்யாமல் கைவிடுதல்

(அ) சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதியில் 2018 ஆம் ஆண்டு மாவட்டச் செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா 56,640,750 பால் பதனிடும் செயற்திட்டத்திற்கான உபகரணங்கள் கொள்வனவு மற்றும் கட்டட நிர்மாணம் ஆகிய இரண்டு வேலைத்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டு நிறைவுசெய்யப்பட வேண்டியிருந்தும் நாளதுவரை குறித்த வேலைத்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதியில் 2018 ஆம் ஆண்டு மாவட்டச் செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா 75,323,600 மலக்கழிவுகளை மீள்சுழற்சியிடல் செயற்திட்டம் 2019 ஆம் ஆண்டு நிறைவுசெய்யப்பட வேண்டியிருந்தும் குறித்த செயற்திட்டத்திற்காக ரூபா 65,955,381 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தும் நாளதுவரை வேலைத்திட்டம் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

3.2 பெறுகைகள்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டு நெறியின் 8.9.1 (ஆ) இன் பிரகாரம் ரூபா 500,000 பெறுமதிக்கு மேற்பட்ட பொருட்கள் கொள்வனவு தொடர்பில் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் மாவட்டச் செயலகத்தினால் கூட்டுமொத்தம் ரூபா 3,796,399 பெறுகை நடைமுறை கொள்வனவு தொடர்பில் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருக்காமை பெறுகை வழிகாட்டு நெறிக்கு மாறான விடயமாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது.

3.3 செத்து முகாமைத்துவம்

3.3.1 உரித்தற்ற நிலையில் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

மாவட்டச் செயலகம் மற்றும் 08 பிரதேச செயலகத்தினால் 2022 ஆம் ஆண்டு கிராமத்துடனான கலந்துரையாடல் 3 மில்லியன் செயற்திட்டம் மற்றும் 2018 ஆம் ஆண்டு நிலசெவன திட்டம் ஆகியவற்றின் கீழ் ரூபா 290,468,480 பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்ட 35 எண்ணிக்கையான கட்டடங்கள் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்ற போதும் அக் காணிகளின் உரிமைத்துவம் கடந்த 01 தொடக்கம் 11 வருடங்களாக கையேற்கப்பட்டிருக்கவில்லை.

3.3.2 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

மாவட்டச் செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களில் 41 எண்ணிக்கையான சொத்துக்கள் பயன்படுத்தப்படாது, பழுதடைந்து காணப்படுகின்றமை தொடர்பில் திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.4 அரச உத்தியோகத்தர்கள் பிணை வைப்பு

மீளாய்வாண்டில் நிதிப்பிரமாணம் 880 மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜங்க அமைச்சின் 04/2022 ஆம் இலக்க 2022.03.16 ஆந் திகதிய சுற்றறிக்கை ஆகியவற்றின் பிரகாரம், பிணைப்பணம் வைப்பிலிடப்பட வேண்டிய மாவட்டச் செயலகம் மற்றும் 05 பிரதேச செயலகங்களின் 27 எண்ணிக்கையான உத்தியோகத்தர்களால் பிணைப்பணம் வைப்பிலிடப்பட்டிருக்கவில்லை.

3.5 நட்டங்களும் சேதங்களும்

2018 ஆம் ஆண்டின் சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு, புனர்வாழ்வழிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதியில் மாவட்டச் செயலகத்தினால் செயற்படுத்தப்பட்ட 02 எண்ணிக்கையான செயற்திட்டங்களுக்கான ஒப்பந்தங்கள் முடிவுறுத்தப்பட்டிருந்தபோதிலும் அவற்றுக்கான 02 எண்ணிக்கையான செயற்பாட்டு பிணைமுறிகளின் கூட்டுமொத்தம் ரூபா 4,822,238 அரச வருமானமாக மாற்றப்பட வேண்டியிருந்தும் 02 வருடங்களாக மாற்றப்பட்டிருக்காமையால் அரச வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது.

3.6 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) 07 பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் காசோலையில் பணம் பெறுபவர்களுக்கு வழங்குவதற்கு பதிலாக வேறு நபர்கள் கையொப்பம் இட்டு காசோலைகளை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை.

(ஆ) 04 பிரதேச செயலகங்களின் கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர்களின் அலுவலகங்கள் பதவி நிலை உத்தியோகத்தர்களால் உரிய முறையில் தொடர்ச்சியான மேற்பார்வைக்குட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4. நல்லாளுகை

பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்

2021 ஆம் ஆண்டில் 15 பிரதேச செயலகத்தில் மலசலகூடம் அமைப்பதற்கான வசதிகள் 4323 பயனாளிகளுக்கு தேவையாக இருந்தபோதிலும் இது தொடர்பில் நாளதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 2022 ஆம் ஆண்டுக்கான மலசலகூட வசதி தேவையான பயனாளிகளின் விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

5. மனிதவள முகாமைத்துவம்

(அ) 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நான்கு நிலைகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1468 ஆக காணப்பட்டிருந்தபோதிலும் உள்ளபடியான பதவியணியினர் 2134 ஆக காணப்பட்டிருந்தமையினால் மீளாய்வாண்டின் இறுதியில் 255 வெற்றிடங்களை நிரப்புவதற்கோ மற்றும் இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட அலுவலர்களில் காணப்பட்ட 904 மிகையாளணியினர் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. விபரம் வருமாறு

இல	ஊழியர் வகை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்	உள்ளபடியான பதவியணியினர்	வெற்றிடங்களின் எண்ணிக்கை	மிகைகளின் எண்ணிக்கை
(i)	சிரேஸ்ட நிலை	56	52	04	-
(ii)	முன்றாம் நிலை	64	22	44	02
(iii)	இரண்டாம் நிலை	1136	1917	118	898
(iv)	ஆரம்ப நிலை	212	143	89	04
		1468	2134	255	904

(ஆ) மாவட்டச் செயலகம் மற்றும் 15 பிரதேச செயகலங்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினரின் பிரகாரம் 04 என்னிக்கையான பதவிகளுக்கு 41 பதவியணியினர் வெற்றிடமாக காணப்படுவதுடன் குறித்த அதே பதவிகளில் 22 பதவியணியினர் மிகையாக காணப்படுகின்றமை தொடர்பில் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இடையில் வினைத்திறனான ஆளணி ஒதுக்கிடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. விபரம் வருமாறு

இல	பதவி நிலை	மிகைகளின் எண்ணிக்கை	வெற்றிடங்களின் எண்ணிக்கை
(1)	உதவிப்பணிப்பாளர் (Supernue)	02	02
(2)	அபிவிருத்தி இணைப்பாளர்	01	02
(3)	அபிவிருத்தி உத்தியோகத்தர் (திட்டமிடல்)	13	13
(4)	முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்	06	24
		22	41

(இ) 18/2001 ஆம் இலக்க 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் இணைந்த சேவையின் இடமாற்ற நடைமுறை தொடர்பாக 1589/30 ஆம் இலக்க 2009.02.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி ஆகியவற்றின் பிரகாரம், ஒவ்வொரு சேவை நிலையத்திலும் சேவை புரியக்கூடிய ஆகக்கூடிய சேவைக்காலம் 05 ஆண்டுகள் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் தெரிவுக்கணக்காய்வின் போது 06 பிரதேச செயலகங்களில் கூட்டுமொத்தம் 123 அலுவலர்கள் (ஏனைய அமைச்சு திணைக்களங்கள் தவிர்ந்த) 6 தொடக்கம் 17 வருடங்கள் வரை ஒரே சேவை நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

பா. பற்குணன்
சிரேஸ்ட உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பதிலாக

4. செயலாற்றுகைச்சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

கட்டிடம் மற்றும் கட்டமைப்பு புனரமைப்பும் மேம்படுத்தலும்						
செலவுத்தலைப்பு - 264		நிகழ்ச்சித் திட்டம் - 1	கருத் திட்டம் - 1	உப கருத்திட்டம் - 0	செலவின விடயம் - 2001	
தொ. இல	வேலைத்திட்டத்தின் பெயர்	பிரிவு	ஒதுக்கீடு	செலவினம்	முன்னேற்ற சதவீதம்	
					நிதி	பௌதிகம்
1	மோட்டார் வாகன தரிப்பிட மேம்பாடு மற்றும் மின் இணைப்பு, நீர்வசதி, நில அமைப்பு வேலைகள் மற்றும் சுவர் சிற்றலுமாரிகள் வசதியேற்படுத்தல்	மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்	2,003,945.00	2,003,910.24	100	100
2	நிர்வாக கட்டடத்தின் கூரைவேலைகள்	மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்	1,641,180.00	1,641,180.00	100	100
3	உள் மின்னிணைப்பு வேலைகள்	பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை	195,425.00	195,425.00	100	100
4	மகாநாட்டு மண்டபத்திற்கான 3 தள மின் இணைப்பு வேலைகள்	பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை	1,218,820.00	1,218,820.00	100	100
5	பகுதி பிரித்தல் மற்றும் மின்னிணைப்பு வேலைகள்	பிரதேச செயலகம், நல்லூர்	473,330.00	473,329.80	100	100
6	மகாநாட்டு மண்டபத்திற்கான மின்னிணைப்பு வேலைகள்	பிரதேச செயலகம், தெல்லிப்பழை	575,000.00	575,000.00	100	100
7	முன்சேவை மையத்தின் மேம்படுத்தல்	பிரதேச செயலகம், காரைநகர்	220,000.00	220,000.00	100	100
8	நிர்வாக கட்டடத்தின்கூரைவேலைகள்	பிரதேச செயலகம், பருத்தித்துறை	750,000.00	750,000.00	100	100
9	வாகன தரிப்பிட திருத்தம்	பிரதேச செயலகம், பருத்தித்துறை	800,000.00	800,000.00	100	100
10	மலசலகூட மேம்பாடு மற்றும் கதவுதிருத்தம்	பிரதேச செயலகம், பருத்தித்துறை	400,000.00	400,000.00	100	100
11	மலசலகூட மேம்பாடு	பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்	250,000.00	250,000.00	100	100

12	சுவர் சிற்றறைகள் அமைப்பு	பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்	750,000.00	750,000.00	100	100
13	அலுவலக கட்டட மேம்பாடு	பிரதேச செயலகம், கோப்பாய்	600,000.00	600,000.00	100	100
14	நகர்த்தக்கூடிய கொட்டகை மற்றும் சிற்றுண்டிச்சாலைக் கான மின்னிணைப்பு	பிரதேச செயலகம், கரவெட்டி	122,300.00	122,300.00	100	100
மொத்தம்			**10,000,000.00**	**9,999,965.04**	**100**	**100**

பொறி இயந்திரம் மற்றும் உபகரணங்களின் புனரமைப்பும் மேம்படுத்தலும்						
செலவுத் தலைப்பு - 264		**நிகழ்ச்சித் திட்டம் - 1**	**கருத் திட்டம் - 1**	**உப கருத்திட்டம் - 0**	**செலவின விடயம் - 2002**	
